சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.154/2019

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9 ம் நாள் பி,வா.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சி.தினேஷ் குமார், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாமிநாதன் | வயது | 65 |
| த/பெ | நஞ்சைய கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | வெள்ளியங்காடு கிராமம். | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | -- |

முதல் விசாரணை :

இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பாணை வந்து அதன் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி தான். எனக்கு வெள்ளியங்காடு கிராமத்தில் பூமி இருந்தது என்றால் சரி தான். எந்தெந்த புல எண்களில் இருந்தன என்றால் புல எண்.486/1 மற்றும் 498/2 ஏ வில் இருந்தன. மொத்தம் 5 ஏக்கர் 46 செண்ட் இருந்தது. அந்த பூமி எனக்கு எவ்வாறு வந்தது என்றால் எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பாகத்தில் வந்தது. இந்த சொத்துக்களுக்கு ஆரம்ப காலத்தில் இருந்து தடம் எப்படி இருந்தது என்றால் தாவா சொத்துக்கு மேற்கே முத்தாளம்மன் கோவில் வழியாக தான் வண்டித்தடம் இருந்தது. அதனை நான் 50 ஆண்டு காலம் பயன்படுத்தி வந்தேன். இன்று வரை அந்த தடம் பயன்பாட்டில் உள்ளது. அந்த பகுதியில் உள்ள விவசாயிகள் அனைவரும் அதனை பயன் படுத்தி வருகிறார்கள். அந்த பூமிக்கு கீழ்புறம் பள்ளம் வரை போய் சேருகிறது. அந்த வழியாக ஆள் மட்டும் போக முடியும். மழை காலங்களில் மழை பெய்து தண்ணீர் வந்தால் அது வழியாக போக முடியாது,. எனக்கு சொந்தமான பூமியை யாருக்கு எப்போது விற்றேன் என்றால் வாதி வள்ளியம்மாளுக்கு 80 செண்ட் நிலத்தை சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் விற்றேன். ரத்தினாள் என்பவருக்கு 1 ஏக்கர் 20 செண்ட் விற்றேன். பாக்கி 3 ஏக்கர் 46 செண்ட் ஐ ஒரு சுப்ரமணி என்பவரிடம் கடனுக்கு ஈடாக வைத்து அந்த கடனை கட்ட முடியாமல் அவருக்கே அதை விற்று விட்டேன். அந்த சொத்தை பொறுத்து

சுப்ரமணியிடம் நான் ஏற்கனவே ஒப்பந்தம் போட்டிருந்தேன் என்றால் சரி தான். வாதிக்கு நான் எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தில் 94 செண்ட் என குறிப்பிடப்பட்டு உள்ளது என்றால் நான் 80 செண்ட் தான் விற்று அதற்குரிய பணத்தை தான் வாதியிடம் வாங்கினேன். எனக்கு படிப்பறிவு இல்லாததால் என்னை ஏமாற்றி 80 செண்டிற்கு பதிலாக 94 செண்ட் என கிரைய பத்திரத்தில் மோசடியாக எழுதி கொண்டார்கள் . வாதிக்கு நான் விற்பனை செய்த 80 செண்ட் போக மீதமுள்ள விஸ்தீரணத்தை தான் சுப்ரமணிக்கு எழுதி கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரத்திலும் தண்டபாணிக்கு எழுதி கொடுத்த பொது அதிகார ஆவணத்திலும் குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரி தான். என்னுடைய பொது அதிகார முகவராக இருந்து தான் அதே அளவுகளை தான் தண்டபாணி சுப்ரமணிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரி தான். புல எண்.498/2 ஏ விற்கு தென்புறம் தடம் எதாவது உள்ளதா என்றால் இல்லை. கொடிக்கால் எனப்படும் பள்ளம் தான் உள்ளது. வாதிக்கு எழுதி கொடுத்த கிரையப் பத்திரத்தில் 6-வது தாளில் தடம் என்ற வார்த்தை மட்டும் தட்டச்சு செய்து மற்றவை அனைத்தும் கணிணியி ல் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் என்னிடம் கையெழுத்து வாங்கும் போது அதில் எதுவும் எழுதப்பட வில்லை. கையெழுத்து வாங்கிய பின்னர் எழுதி கொண்டார்கள். கிரைய பத்திரத்தில் என்னுடைய கையெழுத்திற்கும் கணிணியில் டைப் செய்யப்பட்ட இடத்திற்கும் நடுவில் தட்டச்சு செய்து கொண்டார்கள். எனக்கு தெரியாமலேயே என்னிடம் கையெழுத்து பெற்று பதிவு செய்து விட்டார்கள் என்றால் சரி தான். எனக்கு அப்போது உடல்நிலை சரியில்லாததால் நான் அதை படிக்காமல் கையெழுத்து போட்டு விட்டேன். வா.சா.ஆ 2 தான் நான் வாதிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரி தான். வா.சா.ஆ. 2 ல் புல எண்.498/2 ஏ ல் செக்கு பந்தியாக பள்ளவாரிக்கும் வடக்கு என்று குறிப்பிடப் பட்டுள்ளது என்றால் சரி தான். புல எண்.486/1 ல் நான் வாதிக்கு விற்ற 80 செண்ட்போக மீதம் 2 ஏக்கர் 15 செண்ட் இருந்தது என்றால் சரி தான். அதே போல புல எண்.498/2 ஏ ல் ரத்தினாள் என்பவருக்கு விற்ற 1 ஏக்கர் 20 செண்ட் போக மீதம் 1 ஏக்கர் 31 செண்ட் என் கை வசம் இருந்தது என்றால் சரி தான். இரண்டு புல எண்களிலும் நான் விற்றது போக என் கை வசம் 3.46 ஏக்கர் இருந்தது என்றால் சரி தான். அதன் பின்னர் சுமார் 7 ஆண்டுகள்

கழித்து தான் அந்த 3.46 ஏக்கர் நிலத்தை சுப்ரமணி என்பவருக்கு பொது அதிகார ஆவணம் மூலமாக விற்பனை செய்தேன் என்றால் சரி தான். விற்றது போக நான் அனுபவித்து வந்த சொத்தை முத்தாளம்மன் கோவிலில் இருந்து வரும் வண்டித் தடத்தின் வழியாக தான் சென்று அனுபவித்து வந்தேன் என்றால் சரி தான். அந்த வண்டித்தடம் புல எண்.498/2 ஏ காலை வரை தான் உள்ளது என்றால் சரி தான். அந்த பூமிக்கு கிழக்கே கொடிக்கால் எனப்படும் பள்ள வாரி உள்ளது என்றால் சரி தான். அதில் கால் தடம் மட்டுமே செல்லும். சுப்ரமணிக்கு விற்ற பூமியை யார் வாங்கி உள்ளார்கள் என்றால் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வாங்கி உள்ளார்கள். நான், வாதி , ரத்தினாள் மற்றும் சுப்ரமணி ஆகியோர்களுக்கு விற்பனை செய்த காலத்தில் பூமி உட்பிரிவு செய்யப்படாமல் இருந்தது என்றால் சரி தான். நான் விற்பனை செய்த சுமார் 7 முதல் 8 வருடங்களிலும் வாதியும் ரத்தினாளும் உட்பிரிவு செய்து கொள்ள வில்லை என்றால் சரி தான். அவ்வாறு உட்பிரிவு செய்திருந்தால் நான் வாதிக்கு 80 செண்ட் மட்டுமே விற்பனை செய்தது தெரிய வந்து இருக்கும் என்றால் சரி தான். நான் விற்பனை செய்த போது எந்த தடத்தை அனுபவித்து வந்தார்களோ அதே தடத்தை தான் தற்போதும் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரி தான்.

(4, மற்றும் 5 பிரதிவாதிகள், வாதி தரப்பில் யாரும் ஆஜர் இல்லை, நீதியின் நலனை கருதி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/-G.Gengaraj

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.